04.03.2025

OS No: 125/2022

வா.சா.2 திரு.செல்வம் , த/பெ. அமரி

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

திருமணமானதிலிருந்து நான் குடியிருந்து வருவது சிவகங்கை என்றால் சிவகங்கையிலும் குடியிருக்கிறேன், கிருங்காகோட்டையிலும் குடியிருக்கிறேன். கிருங்காகோட்டையில் எனக்கு சொந்த வீடு உள்ளதா என்றால் உள்ளது அதன் கதவு எண்.1139 ஆகும். நான் குறிப்பிடும் வீடானது என்னுடைய வீடு அல்ல என்றும், என் தம்பிக்கு சொந்தமான வீடு என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய ஆதார் அட்டை முகவரி எங்குள்ளது என்றால் கிருங்காகோட்டை முகவரியில் உள்ளது. ஆதார் அட்டை எப்போது, எந்த வருடம் வாங்கினேன் என்றால் ஆதார் அட்டை எப்போது கொடுத்தார்களோ அந்த வருடம் வாங்கினேன். ஆதார் அட்டையில் தேதி 31.12.2019 எனக்குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குச் சொத்து எத்தனை செண்ட் அளவுள்ளது என்றால் உத்தேசமாக 3 1/2 செண்ட் அளவுள்ளது. மேற்சொன்ன 3 1/2 இடத்தில் எத்தனை செண்ட் அளவில் வீடு உள்ளது என்றால் நான் அதைப் பார்க்கவில்லை. பிரதிவாதி குமரேசன் வாதியின் சகோதரர் என்றால் சரிதான். பிரதிவாதி குமரேசன் என்ன வேலை செய்கிறார் என்றால் பெங்களூரில் டீ வியாபாரம் செய்கிறார். குமரேசனுக்கு 12 வயது ஆனதிலிருந்து பெங்களூரில் டீ வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சிறுவயதிலேயே சென்று விட்டார். பிரதிவாதி குமரேசன் பெங்களூரில் சம்பாதிக்கும் பணத்தையெல்லாம் அவருடைய தந்தைக்குத்தான் அனுப்பி வைப்பார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை மேற்படி பண்ணை வைத்து சொத்துக்கள் வாங்கியும், வட்டிக்கு விட்டும் இருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை வாங்கிட பிரதிவாதியின் தந்தை தான் அட்வான்ஸ் பணம் கொடுத்தார் என்றால் கிடையாது, வாதி தான் அவருடைய சம்பளத்தில் கிடைத்த பணத்தைக் கொடுத்தார். பிரதிவாதி தான் அவருடைய தந்தைக்கு பணம் கொடுத்து தாவா சொத்தை கிரையம்

வாங்கிட சொன்னார் என்றும், பிரதிவாதியின் தந்தை மேற்படி பணத்தைக் கொண்டு வாதி பெயரில் தாவா சொத்தை வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரையம் வாங்கிய சமயத்தில் நான் சிவகங்கையில் இருந்தேன் என்றால் சரியல்ல, கிருங்காகோட்டையில் இருந்தார். வாதிக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. வாதியின் கணவர் யார் என்றால் முருகேசன் அவர் இறந்துவிட்டாரா என்றால் உயிருடன் உள்ளார். வாதியும், அவருடைய கணவரும் திருமணத்திற்கு பின் எவ்வளவு நாட்களில் பிரிந்தார்கள் என்றால் 2 வருடத்தில் பிரிந்தார்கள். வாதிக்கும், அவருடைய கணவருக்கும் குழந்தைகள் இருந்தனரா என்றால் ஒருபையன் இருந்தார். வாதி, அவருடைய மகன் ஆகியோர் வாதியின் கணவரை பிரிந்து வாதியின் தந்தை வீட்டில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். பிரதிவாதி சம்பாதித்துக் கொடுத்த பணத்தை வைத்து தான் வாதியும், அவருடைய பிள்ளைகளும் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரியல்ல, வாதியின் சொந்த உழைப்பால் கிடைத்த பணத்தை வைத்து வாழ்ந்து வந்தார்கள். வாதி, அவருடைய கணவரை பிரிந்து வந்தவுடன் என்ன வேலை பார்த்தார் என்றால் சமையல் உதவியாளராக வேலை பார்த்து வந்தார். எவ்வளவு சம்பளம் பெற்று வந்தார் என்றால் தெரியாது. வாதிக்கு சொத்து வாங்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் யார் வீடு கட்டிட நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் வாதி மாலதி தான் 2019ல் நடவடிக்கை எடுத்தார். தாவா சொத்து பூமி பூஜை தொடங்கிய அன்று பிரதிவாதி தான் ரூ.4லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதன்பிறகு பல தவணைகளில் பிரதிவாதி தான் பணம் கொடுத்து தாவா சொத்திலுள்ள வீட்டை கட்டி முடிக்க உதவினார் என்றால் சரியல்ல, மேற்படி தாவா சொத்தில் கட்டடப்பட்ட வீடானது 70சதவீதம் முடிக்கப்படாமல் வேலை பாக்கி உள்ளது. 30 சதவீதம் வேலை தான் பார்க்கவேண்டியுள்ளது, 70 சதவீதம் வேலை முடிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டில் நகை எப்போது காணாமல்போனது என்றால் 4,5 வருடத்திற்கு முன்பு காணாமல்போனது.

பிரதிவாதியின் வீட்டில் நகை காணாமல்போனது குறித்தும், அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது குறித்தும் எனது பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நகை காணாமல்போனதற்கு பின்பு தான், வாதி, பிரதிவாதி மற்றும் அவருடைய தந்தை ஆகியோருக்கிடையே பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதி தற்போது எங்குள்ளார் என்றால் அவர் வீட்டில் உள்ளார், பிரதிவாதி தனியாக வீடு கட்டியுள்ளாரா என்றால் அவருடைய தந்தை கட்டிய வீட்டில் உள்ளார். பிரதிவாதியின் பூர்வீக சொத்து எவ்வளவு உள்ளது என்றால் 2 3/4ஏக்கர் உள்ளது, சர்வே எண் தெரியாது. பிரதிவாதியின் தகப்பனாருக்கு பூர்வீக சொத்தாக 60 செண்ட் நிலம் மட்டுமே உள்ளது என்றும் 2 3/4ஏக்கர் நிலம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடானது முழுமையாக கட்டி முடிக்காமல் இருப்பதற்கு பிரதிவாதி பணம் கொடுக்காமல் இருப்பதால் தான் என்றால் சரியல்ல. தாவா சொத்து பிரதிவாதிக்காக வாங்கப்பட்ட சொத்து என்றும், அதில் கட்டப்பட்ட வீடும் பிரதிவாதிக்காக கட்டப்பட்டது என்றும், அதில் வாதி அத்துமீறி சென்று வசிப்பதால் பிரதிவாதி பணம் கொடுக்காமல் மேற்படி வீடு முழுமையாக கட்டிமுடிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி எவ்வித இடையூறுமின்றி அனுபவம் செய்து வருகிறார் என எனது நிருபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும், அதிலுள்ள வீட்டிற்கும் வாதிக்கு எவ்வித சம்மந்தமுமில்லை என்றும், மேற்படி வீட்டில் வாதி அத்துமீறி வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் 40 வருடமாக சிவகங்கையில் வசித்து வருகிறேன் என்றும், கிருங்காகோட்டையில் என்ன நடக்கிறது என்று அதனால் தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.03.04 18:04:19 +0530